**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(18.04.2018 முதல் 22.04.2018)**
**அறிக்கைஎண் 30/2018**
**தேதி:17.04.2018**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 25°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலைஈரோடு (18.04.2018 முதல் 22.04.2018)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 26°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 45 முதல் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-15 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18.04.18 | 1 | 36 | 26 | 5 | 70 | 50 | 10 | கிழக்கு |
| 19.04.18 | 5 | 36 | 26 | 5 | 70 | 50 | 10 | கிழக்கு |
| 20.04.18 | 25 | 37 | 26 | 4 | 70 | 45 | 15 | தென்கிழக்கு |
| 21.04.18 | 15 | 37 | 26 | 4 | 70 | 45 | 15 | தென்கிழக்கு |
| 22.04.18 | 13 | 37 | 25 | 4 | 70 | 45 | 15 | தென்கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தவார மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்வதின் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதோடு மட்டும் இல்லாமல் மழைநீர் வழிந்தோடாமல் நிலத்தில் சேமிக்கலாம்.
- ✓ கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தைப் பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.
- ✓ சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் மரவள்ளி கிழங்கில் சுருள் வெள்ளை ஈ வர வாய்ப்புள்ளது. இதற்கு விவசாயிகள் மஞ்சள் ஒட்டும் பொறி ஏக்கருக்கு 5 – 6 இடங்களில் வைக்கவும். தேவைப்பட்டால் புரோபனோபாஸ் 2 மில்லி அல்லது அசிபேட் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.
- ✓ ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேயவிடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ லேசான மழையே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தைப் பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**